செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை. (குறள்.எண்.411)

**பொருள்:** செல்வத்தில் சிறந்தது கேள்விச் செல்வமே அச்செல்வம்
எல்லா செல்வத்திலும் உயர்ந்தது

**பழனி நகராட்சி**

2018–ம் ஆண்டு ஜுலை மாதம் 27–ம் நாள். வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 27–07–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி

**கூட்டப்பொருள்**

**1.** இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30–06–2018 பிற்பகல் முதல் பணி ஓய்வு பெற்றுள்ள கீழ் காணும் மூன்று பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக பங்கு தொகையாக தலா ரூ.10000/– வீதம் மொத்தம் ரூ.30000/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பழனி யம்மாள் / பொன்னன் (துப்புரவு பணியாளர்) | – | ரூ.10000/– |
| 2. | ராஜம்மாள் / வெங்கிட்டான் (துப்புரவு பணியாளர்) | – | ரூ.10000/– |
| 3. | கோபாலன் / சின்னக்கண்ணு (துப்புரவு பணியாளர்) | – | ரூ.10000/– |
| | | | ரூ.30000/– |

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்

**2.** இந்நகராட்சியில் அனைத்து வரி இனங்களுக்கும் கணினி மூலமாக CFC ரசீதுகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. CFC ரசீதுகள் போதிய இருப்பில் இல்லை. எனவே CFC ரசீதுகள் அச்சடிப்பதற்க்கும் மற்றும் A4 பேப்பர், பிறப்பு அறிக்கை இறப்பு அறிக்கைகளும் அச்சடிப்பதற்க்கும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.50/– க்கு மன்ற அனுமதியும், மேற்படி எழுது பொருட்களை (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சி மல்டி பர்பஸ் இண்டிகோ சர்வ் நிறுவனத்தில் வாங்கிக் கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ. 2.50/– (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** இந்நகராட்சியில் இயங்கி கொண்டிருக்கும் அனைத்து பிரிவு கணினி பிரிண்டர்களுக்கு **Refilling** மற்றும் **Recondition Powder Drum Blade** மாற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**4.**அரசாணை எண்11 நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள் 12.01.1999ன்படி ஐந்தாண்டுகளுக்குஒருமுறைதொழில்முறைசீராய்வுசெய்துகுறைந்தது 25% அதிகபட்சமாக 35% உயர்வுசெய்யப்படவேண்டுமெனதெரிவிக்கப்பட்டதின்பேரில் 2008–2009 ஆம் அரையாண்டில் 01.10.1998 முதல் 25%உயர்வுசெய்யப்பட்டது. மேற்படிஅரசாணையின்படி 01.10.2013 முதல் 20132014 இரண்டாம் அரையாண்டு) வரிச் சீராய்வுசெய்யப்பட்டது. மேலும், நகராட்சிநிர்வாகஆணையர், சென்னைஅவர்களின் ந.க.எண்.12503/2018/ஆர்.1

நாள் 21.05.2018 ன் சுற்றறிக்கையின்படிதொழில்வரிசீராய்வுசெய்யதெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படிசீராய்வு 01.10.2018 முதல் கணக்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே தற்போது நடைமுறையில் உள்ள அரையாண்டு தொழில்வரி தொகையும் 01.10.2018 முதல் 25% உயர்வுசெய்யநகர் மன்றத் தீர்மானம் எண்.518 நாள் 15.06.2018ல் 01.10.2018 முதல்வசூலிக்கப்படஉள்ளவரித் தொகைகீழ்க்கண்டுள்ளவாறு

| வ. எண். | அரையாண்டு வருமானம் | நடைமுறையில் உள்ள தொழில்வரி | 25%உயர்வு செய்து மாற்றியமைக்கப்பட்ட தொழில்வரி |
|---|---|---|---|
| 1 | 21,000/– வரை | இல்லை | இல்லை |
| 2 | 21,001/– முதல் 30,000/– வரை | 130/– | 165/– |
| 3 | 30,001/– முதல் 45,000/– வரை | 330/– | 415/– |
| 4 | 45,001/– முதல் 60,000/– வரை | 640/– | 800/– |
| 5 | 60,000/– முதல் 75,000/– வரை | 960/– | 1200/– |
| 6 | 75,001/– மற்றும் அதற்குமேல் | 1250/– | 1250/– |

மேற்கண்டநகர் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில்தொழில்வரிஅமுல்படுத்தப்படஉள்ளது குறித்து ஏதேனும்ஆட்சேபனைமற்றும் ஆலோசனைகள் ஏதும் இருப்பின் நகராட்சிஆணையாளர், பழனிக்குஇவ்வறிவிப்புநாளில் இருந்து 30 தினங்களுக்குள்தெரிவித்துகொள்ளலாம் எனதினச் சங்குதமிழ்நாளிதழில் 18.06.2018ல் விளம்பரம் செய்யப்பட்டும் நகராட்சிபகுதியில்அமைந்துள்ளஅலுவலகங்களின் அலுவலகவிளம்பரப் பலகையில்விளம்பரம் செய்யகடிதம் அனுப்பப்பட்டும், நகரின் முக்கியவீதிகளில்அமைந்துள்ளபகுதியில்விளம்பரம் செய்யப்பட்டும் எவ்விதஆட்சேபனையும் மற்றும் ஆலோசனையும் பெறப்படவில்லை. எனவேமேற்கண்டமாற்றியமைக்கப்பட்டதொழில்வரியினை 01.10.2018 முதல்அமுல்படுத்திடமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.F.DGL0642/RS/DEE/TNPCB/DGL/2018, நாள்.14–06–2018–ன்படி, பழநி நகராட்சிக்கு சொந்தமான ஆட்டு இறைச்சி கூடத்திற்கு உரிமம் 2018–2019–ம் ஆண்டிற்குப் புதுபிக்க நீர் (P&CS) சட்டம் 1974 மற்றும் காற்று (P&CP) சட்டம் 1981–ன்படி, ரூ.14,800/– செலுத்தி ஆன்லைன் மூலம் உரிமம் புதுபிக்க தெரிவித்துள்ளார்கள். எனவே, பொது சுகாதார நலன் கருதி பழநி நகராட்சிக்கு சொந்தமான ஆட்டு இறைச்சி கூடத்திற்கு மாசுகட்டுப்பாட்டு வாரியம் மூலம் 2018–2019–ம் ஆண்டிற்கு உரிமம் புதுப்பிக்க ஆகும் செலவினம் ரூ.14,800/– மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு துறையின் மூலம் உரிமம் புதுப்பிக்க செலுத்த வேண்டிய தொகை ரூ.2,000/– ஆகமொத்தம் ரூ.17,000/–ல் (இதர செலவினம் சேர்த்து) பொதுநிதிலிருந்து செலவு செய்யவும் உரிமம் புதுப்பிக்க தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி கூட்டதில் பொருள் வைக்கப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு</u> மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு உரிமம் புதுப்பிக்கவும் உணவு பாதுகாப்பு (ம) மருந்து கட்டுப்பாட்டு துறையின் மூலம் உரிமம் புதுப்பிக்கவும் ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1782/2016/எச்2)

**6.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 05–07–2018 நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் குப்பைகளின் தரம் குடியிருப்பு பகுதி, வணிக நிறுவனப்பகுதி, உரக்கிடங்கு பகுதி ஆகிய பகுதியில் மறுஆய்வு செய்து அறிக்கை அனுப்ப தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் Green link Analytical and Research, Labourty Pvt கோவை என்ற நிறுவனத்திற்கு மூலம் நகராட்சி பகுதியில் மூன்று இடங்களில் பகுப்பாய்வு செய்யவும், ஒரு பகுப்பாய்வு ரூ.5000/– வீதம் மூன்று பகுப்பாய்வு 3 x 5000 = ரூ.15000/– மேலும் பழநி நகராட்சி உரக்கிடங்கில் தயார் செய்யப்படும் உரத்திற்கு NPL தர பரிசோதனை செய்வதற்காகும் உத்தேச செலவினம் ரூ.15,000 ஆகமொத்தம் ரூ.30,000/– (முப்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு</u>

1. அங்கீகரிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.972/2018/H2)

**7.** பழநி நகராட்சி **1** முதல் **33** வரையிலான வார்டுப் பகுதியில் டெங்கு பாதிப்பின் காரணமாக, காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு, பொது சுகாதாரப் பிரிவில் (ஏடிஸ் கொசு ஒழிப்பு) விழிப்புணர்வு பணி மேற்கொள்ளவதற்காக கீழ்க்கண்ட இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் மேற்கொண்டமைக்கான உத்தேச செலவினத் தொகை ரூ.**20,000/–**க்கு கீழ்க்கண்ட நாளிதலுக்கு வழங்கவும், செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நாளிதழின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | தினகரன் (Kal Publication(P) ltd) தொழில் மலர் | 9900 |
| 2 | தமிழ்முரசு (Kal Publication(P) ltd) தொழில் மலர் | 9450 |

<u>அலுவலகக் குறிப்பு</u> அனுமதிக்கலாம் (ந.க.எண்.2101/2012/எச்2)

**8.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு TN 57 U 3227 குப்பை அள்ளும் டிப்பர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற மராமத்து பணிகள் மேற்கொள்ள **11–07–2018**–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | J.D & Co.,<br>160, Coimbatore Road,<br>Pollachi – 642 002. | 75,000/- |
| 2 | P.B.Sheriff Auto Diesel Works,<br>25/67, A.B.T. Road,<br>Pollachi – 624 001. | 87,000/- |

மேற்கண்டுள்ளவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.**1**–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்தில் **3**குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே, J.D & Co., 160, Coimbatore Road, Pollachi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

பொது சுகாதார நலன் கருதி அவசரம் அவசியம் முன்னிட்டு மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய J.D & Co., 160, Coimbatore Road, Pollachi என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**9.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தற்போது பயன்பாட்டில் உள்ள வாகனம் TN 57 AY 7401 டிப்பர் வாகனத்தில் பேட்டரி பழுதடைந்து விட்டதால் பொது சுகாதாரப்பணிகள் பாதிப்படையாமல் வாகனத்தை உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வர கீழ்க்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | கூதாகை ரூ. |
|---|---|---|
| 1 | J.D & Co, Pollachi | 11500/– |
| 2 | Deepa Auto Store, Palani | 7200/– |
| 3 | Imperial Battery Point, Palani | 6809/– |
| 4 | Moorthy Agency, Palani | 6980/– |

மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண்–**3**–ல் கண்டுள்ள Imperial Battery Point, Palani என்ற நிறுவனம் **12** Volt **13** Plate Charged Battery விநியோகம் செய்ய குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால் அதனை ஏற்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**7000/–**ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொது சுகாதார பிரிவு வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்க விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Imperial Battery Point, Palani என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதினை தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தில் பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3444/2018/எச்2)

**10.** பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட கீழ்க்கண்ட வானகங்களுக்கு ஆண்டு பிரிமியத் தொகை ரூ.1,01,916/—ஐ நியூ இந்தியா அசுரன்ஸ் கம்பெனி லிட்., பழநி அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | வண்டி எண். | ஒதுக்கப்பட்ட எண். | பிரிமியத் தொகை (GST உட்பட) ரூ. |
|---|---|---|---|
| 1 | TN 57 AX 7394 | 2639 | 34,365 |
| 2 | TN 57 AX 7401 | 2650 | 33,674 |
| 3 | TN 57 AT 6977 | 2637 | 33,877 |
| | | மொத்தம் | **1,01,916** |

எனவே, மேற்காணும் தொகை ரூ.1,01,916/—ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2999/2018/எச்2).

**11.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு TN 57 AX 8884 கழிவுநீர் வாகனத்திற்கு தகுதிச்சான்று காலம் 07—07—2018—ம் தேதியுடன் முடிவடைவதால் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 2018—2019—ம் ஆண்டிற்கான தகுதிச்சான்று பெறுவதற்கு, வாகனத்தினை மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசும் பணிக்குண்டான ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.75,000/— (எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3018/2018/எச்2)

**12.** பழநி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள தங்கும் விடுதி தற்சமயம் RCC கூரை மிகவும் பழுதடைந்துள்ளது, மேலும் தரைத்தளம் சிமெண்ட் தளமாக உள்ளதாலும், முழுவதுமாக காரை பூச்சு பெயர்ந்து விழும் நிலையில் இருப்பதாலும், தங்கும் விடுதிக்கு மராமத்து பணியாக மேற்கூரைத் தளம், சுருக்கி, டைல்ஸ் மற்றும் தண்ணீர் விநியோகக் குழாய்கள், வயரிங் பழுது ஏற்பட்டுள்ளதால் மராமத்து பணி செய்த பின்னரே கட்டிடத்தினை பயன்படுத்த இயலும் எனவே அதற்கான மதிப்பீடு ரூ.23.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**13.** பழநி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இடும்பன் இட்டேரி ரோட்டில் பொதுக்கழிப்பறை கட்டப்பட்டுள்ளது, இக்கட்டிடத்தில் சாய்வுத்தளம் மற்றும் கதவுகள் பொருத்தும் பணியினை மேற்கொள்ளவும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலன் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.25,000/— நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் ஏற்கலாம்.

**14.** பழநி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அருள்ஜோதி வீதியில் பொதுக்கழிப்பறை கட்டப்பட்டுள்ளது, இக்கட்டிடத்தின் மேல்பகுதி சுருக்கி, தட்டோடு, மற்றும் வர்ணம் பூசும் பணியினை மேற்கொள்ளவும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலன் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.75,000/-. நிர்வாக அனுமதி வேண்டப்படுகிற

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் ஏற்கலாம்.

**15.** பழநி நகராட்சியில் தூய்மை இந்தியா பாரத திட்டத்தின் கீழ் இடும்பன் இட்டேரி ரோட்டில் கட்டப்பட்ட பொதுக்கழிப்பறைக்கு கூடுதல் பணி மேற்கொள்ளும் பணிக்கு பொது நிதி 2018–2019–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.25 இலட்சத்திற்கு மேற்கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி அளித்ததின் பேரில் **26–06–2018 –**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ . எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | **திரு. R.ரவிக்குமார்,**<br>த/பெ. ரெஙகசாமி,<br>16/195 – பாட்டாளி தெரு,<br>அடிவாரம், பழநி. | -0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 2. | **திருமதி. E. பாண்டிசெல்வி**<br>க/பெ.S. ஈஸ்வரன்<br>பெரியப்பா நகர் (கிழக்கு) வார்டு எண்.4<br>பழனி. | **0.93%** மதிப்பீட்டிற்கு அதிகம். |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்1 ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் **திரு . R.ரவிக்குமார்,** என்பவர் - 0.01 **சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள **திரு. R.ரவிக்குமார்,** -0.01% ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 4105 /2018/இ1). 585

**16.**பழநி நகராட்சியில் தூய்மை இந்தியா பாரத திட்டத்தின் கீழ் அருள்ஜோதி வீதியில் கட்டப்பட்ட பொதுக்கழிப்பறைக்கு கூடுதல் பணி மேற்கொள்ளும் பணிக்கு பொது நிதி 2018–2019–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.75 இலட்சத்திற்கு மேற்கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி அளித்ததின் பேரில் **26–06–2018 –**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு . ஆர்.செல்லத்துரை,<br>வா.எண்.6 அன்னமார்கோவில்தெரு<br>அமரபூண்டிபோஸ்ட், பழனி தாலுகா. | - 0.17% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 2. | திரு.K. பொன்னுச்சாமி<br>த/பெ.கூடலிங்கம்,<br>ஆத்திக்காட்டு தோட்டம்,<br>அப்பனூத்து அஞ்சல்,<br>ஒட்டன்சத்திரம் (வட்டம்),<br>திண்டுக்கல் மாவட்டம் – 624 617 | 1.85% மதிப்பீட்டிற்கு அதிகம். |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்1 ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் **திரு . ஆர்.செல்லத்துரை,** என்பவர் - 0.17 **சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு :**
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள **திரு. ஆர்.செல்லத்துரை, -0.17%** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 4105 /2018/இ1).**

**17.** பழநி நகராட்சி பயன்பாட்டில் உள்ள பாலாறு நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு மின் ஆக்கி **160** KVA (ஜெனரேட்டர்) திண்டுக்கல் சாலையில் மேல்நிலைத் தொட்டியில் உள்ள **30** KVA மின் ஆக்கி (ஜெனரேட்டர்) சிவகிரிப்பட்டி மேல்நிலைத் தொட்டியில் உள்ள மின் ஆக்கி (ஜெனரேட்டர்) இந்த நான்கு மின் ஆக்கிகளுக்கும் (ஜெனரேட்டர்) மின் தடையின் போது பயன்படுத்த படவேண்டியுள்ளதால் மேற்கண்ட மின்ஆக்கி நான்கிற்கும் சீரமைப்பு பணி செய்ய ரூ.1,22,323/– அசோக் லே லேண்டு, திருச்சி அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டு குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதற்கு அனுமதிக்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியில் செலவீனம் மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கலாம்.

**18.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13277/2017/குவ 1, நாள். 27.06.2018–ம் தேதிய சுற்றறிக்கையில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் குடிநீர் குழாய் இணைப்பு தற்பொழுது வழங்கும் நடைமுறையில் இருந்து மாறுதல் செய்து வைப்புத் தொகை மற்றும் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை தவணை முறையில் வசூல் செய்து கொள்ளவும், அதற்கான விபரங்களை கணினியில் மேற்கொள்வது சம்மந்தமாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு.

தற்பொழுது வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளரிடம் இருந்து விண்ணப்பம் பெற்று பரிசிலிக்கப்பட்டு அதற்கான முன்வைப்புத் தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் செலுத்துமாறு கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டு விண்ணப்பதாரர்கள் உரிய தொகையினை செலுத்தியவுடன் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும் நடைமுறை தற்பொழுது பின்பற்றப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மென்பொருள் உருவாக்கம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

குடிநீர் திட்டங்கள் முழுமையான தரத்துக்கு இயக்கவும், அதன்பயன் அனைத்து பொதுமக்களும் உடனடியாக சென்று அடையவும், வீட்டு இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி நகராட்சி சாலைகள் வெட்டப்படுவதை தவிர்க்கவும், தற்பொழுது உள்ள நடைமுறையினை மாற்றி முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்பு கட்டணங்களை சம்பந்தப்பட்ட வீட்டு வரியுடன் இணைத்து தவனை முறையில் அதிகபட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கூறிய நடைமுறையினை பழநி நகராட்சியில் அமல்படுத்திடவும், 10 தவணைகளில் சொத்து வரியுடன் வசூல் செய்து கொள்ளவும், இவ்விபரங்களை குடிநீர் விநியோகத் துணை விதிகளில் சேர்க்க அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பவும், அதனடிப்படையில் மென்பொருளில் மாற்றம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

**1)**நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13277/2017/குவ 1, நாள். 27.06.2018–ம் தேதிய சுற்றறிக்கை பதிவு செய்யலாம்.

**2)**சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு தற்பொழுதுள்ள நடைமுறையான குடிநீர் முன்வைப்புத் தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் வசூல் செய்து பின்னர் இணைப்பு வழங்குவதற்கு பதிலாக சொத்து வரியுடன் 10 தவணைகளில் மேற்படி கட்டணத்தை வசூல் செய்து கொள்ளவும், அதற்கேற்றார்போல் மென்பொருள்களில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும், குடிநீர் விநியோக துணை விதிகளில் புதிய நடைமுறையினை அமல் படுத்துவதற்கு திருத்தங்கள் மேற்கொள்ளவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**19.** நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.38038/2013/UPA2, நாள். 25/06/2018 மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றதில் நகராட்சிகளில் தேசிய வாழ்வாதாரா இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் கீழ் அணைத்து அரசு தலைமை மருத்துவமனையிலும் உட்புறநோயாளிகளாக அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு உடன் வரும் உதவியாளர்கள் இரவு நேரங்களில் நோயாளியுடன் தங்க அனுமதிக்கப்படுவதில்லை, எனவே மருத்துவமனைக்கு வெளியில் வாடகை அடிப்படையில் தங்க நேரிடுகின்றது மருத்துவம் இலவசமாக அளிக்கும் நிலையில் உடன் உதவிக்கு வருபவர்கள் அதிக வாடகை கொடுத்து மருத்துவமனைக்கு வெளியில் தங்கும் நிலை உள்ளது இது அரசு உட்புற நோயாளியின் வாழ்வாதாரத்தினை பாதிக்க கூடியதாக உள்ளது.

எனவே தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தில் அணைத்து அரசு தலைமை மருத்துவமணையிலும் மேற்படி உட்புற நோயாளிகளுடன் உதவிக்கு வருபவர்கள் குறுகிய காலம் தங்கும் வகையில் தங்கும் வளாகம் நகராட்சி மூலம் அமைத்திடவும் அதனை NGO மூலம் பராமரித்திடவும் அரசு உத்திரவிட்டுள்ளது.

பழநி தலைமை மருத்துவமணையில் 207 நோயாளிகள் தங்கி மருத்துவம் செய்துகொள்ள தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (SUH) உட்புற நோயாளிகளுடன் உதவிக்கு வரும் உதவியாளர்கள் குறுகிய காலம் தங்கும் வகையில் வளாகம் ஒன்று 100 படுக்கை வசதியுடன் அமைக்க ஆகும் மதிப்பீடு ரூ.100.00/– இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** நோயாளிகளுடன் வரும் உதவியாளர்கள்/ பாதுகாவலர்கள் சுமார் 90 முதல் 100 பேர் மருத்துவமணை நடைபாதை/ மரத்தடியின் கீழ் தங்குகின்றனர் அவர்கள் பாதுகாப்பாக தங்கும்வகையில் படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்து சமர்பிக்கலாம்.

**2)** பணி முடிவுற்ற பின் மேற்படி பராமரிப்பு (O&M) பணிகனை ஆர்.எம்.எஜிகேஷனல் டிரஸ்ட் மூலம் பணி மேற்கொள்வதை அனுமதிக்கலாம்.

**20.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38038/2013/UPA2, நாள்.11/07/2018 –ல் வரப்பெற்றதை தொடர்ந்து பழநியில் வீடட்றோரும், ஆதரவற்றோருக்கும் தங்குவதற்கு ஏதுவாக பழநி நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் நகர்புற வீடட்றோருக்கான தங்கும் மையம் (Shelter for Urban Homeless) அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது. பழநி நகராட்சி பகுதியில் சுமார் 29 நபர்கள் உள்ளனர், அவர்கள் தங்கும் வகையில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் இடும்பன் இட்டேரி ரோட்டில் உள்ள சமுதாயக்கூடத்தின் மேல்தளத்தில் மேற்படி வீடட்றோரும், ஆதரவற்றோருக்கும் தங்குவதற்கு ஏதுவாக தங்கும் வகையில் தங்கும் மையம் நகராட்சி மூலம் அமைத்திடவும் அதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.47.00/– இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு, நிர்வாக அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்து சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :1)** வீடு அற்றோர் தங்கும் வகையில் தங்கும் வளாகம் ரூ.47.00 இலட்சத்தில் அமைக்க மதிப்பீடு திட்டமுன் மொழிவு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி நிதிபெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** பணி முடிவுற்ற பின் மேற்படி பராமரிப்பு (O&M) பணிகனை ஆர்.எம்.எஜிகேஷனல் டிரஸ்ட் மூலம் பணி மேற்கொள்வதை அனுமதிக்கலாம்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 27–07–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி